# எங்கள் தாத்தா

## வ. தாமோதர முதலியார்

மெத்த ஓர் தவத்தின் பயனாய்,
மேன்மைகள்கொண்ட வீட்டில்;
நற்றவ கீர்த்தியோடும்,
நலிவிலாச் சீரினோடும்,
பெற்றவோர் பெருமையோடு,
பெருமகன் வாழ்ந்திருந்தார்.
அன்னவர் அன்பால் நாங்கள்,
அகமகிழ்வடைந்திருந்தோம்.

நன்னியமுறுவல் காட்டும்,
நல்லிதழ் அன்பைச்சொறியும்;
எம்அன்னையின் தந்தை யென்றோர்,
எழுச்சிகொள் உறவின் சான்றோன்;
மன்னிய பெருமையெல்லாம்,
மனதினால் அளந்தேவைத்து;
பின்னிய உறவால் எம்மை,
பிரியமாய் அணைத்திருந்தார்.

சின்னஞ்சிறு வயது முதலாய்,
சீர்மையில் நிறைந்த கோமான்;
கன்னலின் சாறுபோன்று,
கனிவினை செய்யும் தாத்தா.
மின்னலாய் மறைந்தார் மண்ணில்,
மிகுதிநாள் எங்கு காண்போம் !
அன்னவர் சொறிந்த அன்பை.
அணையாது நெஞ்சில் காப்போம் !!

V.J. கோபிகிருஷ்ணன்
V.J. மதுசூதனன்
K.A. பாலாஜி
K.A. ஸ்ரீராம்
S. பிரகாஷ்
S. பிரஷாந்த்